# விடுதலைத் தீப்பொறி

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது 2001 மே 05இல் 25 ஆண்டுகளை நிறைவு செய்து நிற்கின்றது. இவ்வமைப்பு இன்று தமிழீழ தேசிய இனத்தின் ஒட்டுமொத்தமான அரசியல், இராணுவ, பொருண்மிய, கலைபண்பாட்டுக் கட்டுமானங்களை உள்ளடக்கியதாக பரிணாமம் பெற்றுள்ளது. ஒரு சிறிய அமைப்பாகத் தொடங்கி ஒரே தலைமையின் கீழ் கடந்த கால் நூற்றாண்டு காலமாக எத்தனையோ சோதனைகள் பின்னடைவுகளை எதிர்கொண்டபோதும் எவ்வாறு இன்று காணப்படும் உன்னத வளர்ச்சியை எட்ட முடிந்தது?

இன்று அனைத்துலக நாடுகளும் முன்னர் எதிர்பார்த்ததுபோல பயங்கரவாத முத்திரை குத்தி இராணுவ ரீதியில் ஒடுக்கிவிட முடியாது என்பதை உணரத் தொடங்கியுள்ளன.

இத்தகைய பெருமை மிக்க விடுதலைப் புலிகளின் வரலாற்றுத் தொடரை க. வே. பாலகுமாரன் அவர்கள் தொடர்ச்சியாகத் தருகின்றார்.

பாகம் 1
பாகம் 2

# விடுதலைத் தீப்பொறி

**பாகம் 1**

“வெள்ளிவிழா ஆண்டில் விடுதலைப் புலிகள்” என விசேட தலைப்பிட்டார் 2001 மே மாதம் 6ஆம் திகதி ஞாயிறு வீரகேசரியில் ஜி. நடேசன். தமிழ் மக்களின் இன்றைய இருப்பினை முழுமையாக பிரதி நிதித்துவம் செய்யும் விடுதலைப் புலிகளுக்கு 2001 மே 5ஆம் நாள் 25 ஆவது அகவை நிறைவாகியது. இன்று புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு எனப் பிரிக்க முடியாது இரண்டறக் கலந்துவிட்ட நிலை தோன்றிவிட்டது. விடுதலைப் போராட்டம் என்னும் சூறாவளியிலே கண்மையமாகத் திகழும் புலிகள், உலகத் தமிழ் மக்களை பல்லாயிரம் ஆண்டுகளின் பின்னே மீண்டும் உயர்நிலைப்படுத்திவிட்டனர். மிக அற்புதமான ஒரு சமன்பாடு இது.

இன்று தமிழ் மக்களின் மனக்கண்ணிலே அழியாத ஓவியமாக மலர்ந்த முகத்துடன் விடுதலைப்பாதையில் தன்வழி முன்செல்லும் தலைவர் பின்னே அணிவகுத்து மக்கள் செல்லும் காட்சியே நிழலாடுகின்றது. இது இன்றைய வளர்ச்சிநிலை. இந்த நிலைக்கு காரணமான அன்றைய தொடக்கநிலை எவ்வாறு இருந்தது? இதனை அறிய 25 வருடங்களுக்கு ஊடான ஒரு காலப் பயணத்திற்கு உங்களை அழைத்துச் செல்கின்றோம்.

புலிகள் இயக்கம் பிறப்பெடுக்கக் காரணமாக இருந்த 1970களில் அரசியல் குழப்பம் எவ்வாறு இருந்தது? 1956, 1958 ஆண்டுகளின் இன அழிப்புக் கலவரங்கள்... “நான் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது 1958ஆம் ஆண்டின் இனக்கலவரங்களில் நிகழ்ந்த பயங்கரச் சம்பவங்கள் என் மனதில் ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்தின. சிங்கள இன வெறியர்களால் எம் மக்கள் ஈவு இரக்கமில்லாது கொடூரமாக கொல்லப்பட்ட நெஞ்சை உலுக்கும் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன்.

எங்கள் வீட்டிற்குப் பிச்சை கேட்டு வந்த படித்த ஒரு விதவைத் தாய் எனது தாயாரைச்

சந்தித்தபோது அவர் இந்த இனவெறியாட்டத்தால் தனக்கு நேர்ந்த துயரமான அனுபவத்தைக் கூறுவதைக் கண்டேன் இனக்கலவரத்தின்போது சிங்களக் காடையர்கள் கொழும்பில் இருந்த அவரது கணவரையும் குரூரமாகக் கொலை செய்தனர். அவரும் அவரது பிள்ளைகளும் பலத்த எரிகாயங்களுடன் தப்பினார்கள். அவரது உடலில் காணப்பட்ட எரிகாயத் தழும்புகளை பார்த்தபோது நான் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். சிறு குழந்தைகளைக் கொதிக்கும் தாருக்குள் உயிருடன் வீசிக் கொன்ற கோரச் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். அனாதரவான அப்பாவித் தமிழர்கள் எவ்வாறெல்லாம் கொடூரமான தாக்குதலுக்கு இலக்காகினார்கள் என்பதையெல்லாம் கேட்கும்போது என் மக்கள் மீது ஆழ்ந்த அனுதாபமும் அன்பும் ஏற்பட்டன.

இந்த இனவெறி அமைப்பின் பிடிக்குள் இருந்து எம்மக்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற பெரும் உந்துதல் என்னிடம் தோன்றியது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக ஆயுதவலிமையைப் பிரயோகிக்கும் இந்த அமைப்பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என்று நான் ஆழமாக உணர்ந்தேன்.”
*தமிழீழத் தேசியத் தலைவர்*

ஷசிங்களம் மட்டும்’ அடக்குமுறைச் சட்டம் போன்றவற்றால் குமுறிக்கொண்டு இருந்தது அன்றைய இளைஞர் சமூகம். 1970ஆம் ஆண்டின் பின்னர் கல்வித் தரப்படுத்தலும்...
“அன்றைய காலத்தில் எம்மைப்போன்ற தமிழ் மாணவர்களை பெரிதும் பாதித்திருந்த தரப்படுத்தல் சட்டத்தை எதிர்த்து அன்றைய கல்வியமைச்சர் பதியுதீன் மொகமட்டின் கொடும்பாவியை வல்வெட்டித்துறையின் வேம்படிச் சந்தியில் தொங்கவிட்டேன். அரச எதிர்ப்பு வசனங்களை சுவரொட்டிகளில் எழுதி இரவோடு இரவாக பள்ளிக்கூடச் சுவர்களில் ஒட்டினேன். இது எனது சுயமுயற்சிதான். அக்காலத்தில் இவ்வாறான செயல்களை நினைத்துப் பார்க்கவும் முடியாது.”

*தமிழீழத் தேசியத் தலைவர்*

# விடுதலைத் தீப்பொறி

## பாகம் 2

**பேரினவாதத்தையே அரசியல் யாப்பாக்கிய 1972ஆம் ஆண்டு மே மாத அரசியல் யாப்பாலும்...**

தமிழர்களுக்குப் பாதகமான 1972 இன் அரசியல் யாப்பை எதிர்த்து ஏதாவது செய்யவேண்டும் எனத் துடித்துக்கொண்டிருந்தேன். அரச உடமைகளைத் தாக்கி ஒடுக்குமுறைகளை ஏற்றுக்கொள்ளாத போர்க்குணத்தைக் காட்ட விரும்பி முதன்முதலாக தொண்டமானாற்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பேருந்தை எரித்தேன். என்னோடு உதவிக்கு வந்த நண்பர் இடைநடுவில் கைவிட்டுச் சென்றபோதிலும் தனியாக நின்று எடுத்த காரியத்தைச் செய்துமுடித்தேன்.”

*தமிழீழத் தேசியத் தலைவர்*

அதற்கு எதிர்ப்புக் காட்டியபோது கட்டவிழ்த்துவிடப்பட்ட அரச பயங்கரவாதத்தாலும் கொந்தளிப்பின் உச்சிக்குச் சென்ற அதேவேளை இன்னொரு அரசியல் பரிமாணமும் தரமாற்றத்தை ஏற்படுத்தியது.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்றைய காலகட்டம் பற்றித் தனது ஷஅரச பயங்கரவாதமும்

ஆயுதப் புரட்சியும்' என்னும் சிறு நூலில் குறிப்பிட்டதுபோல, "சமாதான வழி தழுவி மேற்கொள்ளப்படும் சனநாயகப் போராட்ட வடிவங்கள், படுதோல்வி கண்டு, மக்களின் சக்தியை அணிதிரட்டும் ஆன்ம பலத்தினை இழக்கும்போது ஆயுதப்போராட்டம் தவிர்க்க முடியாத சரித்திர நியதியாகிவிடுகின்றது." எனவே தமிழீழத்தில் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டமென்பது ஒரு வரலாற்று ரீதியான நிதர்சன உண்மை.

இவ்வாறாகத்தான் விடுதலை என்னும் பெருவிருட்சம் முளைவிட விடுதலை வித்தினை ஊன்றிடவேண்டிய சூழல் கனிந்தது. வித்தினை ஊன்றியவர் யார்? பல்லாயிரம் இளைஞர் மத்தியிலே இனமான உணர்வு மிகுந்தது. ஆனாலும் என்ன? உணர்வு நிலைக்கு அப்பால் சென்று அதனை எதிர்ப்பு இயக்கமாக செயல்படுத்தும் செயல்நிலைக்குச் சென்றோர் மிகச் சிலரே. இச்சிலரிலும் பலரைக் காலம் கழித்து செயற்திறன் மிக்க ஒருவரைத் தெரிவுசெய்யும் வரலாற்றின் இயங்குவிதி இயங்கத் தொடங்கியது.

இத்தகைய செற்படுவோரில் ஒருவராகத்தான் வயதில் மிக இளையவராக, மாணவராக பிரபாகரன் விடுதலை அரங்கினுள் பிரவேசிக்கின்றார்.

அமைதியான கட்டுப்பாடான குடும்பச் சூழல், வல்வை சிதம்பராவில் தோழர்களுடன் கழிந்த மாணவப் பருவம், இப்பின்னணியில் வளர்ந்த பிரபாகரன் மனதில் விடுதலை தீப்பொறி எவ்வாறு பற்றியது?

பற்றியது எவ்வாறு தொடர்ந்து எரிந்தது?

**இன்றளவும் அல்ல, என்றும் அணையாத தீயல்லவா அது...**

மிக இளவயதில் பெற்றோருடன் பிரபாகரன் மட்டக்களப்பில் தங்கியிருந்தபோது அவரது பிஞ்சு மனதில் மீசை முறுக்கி வீரவசனம் பேச வீரபாண்டிய கட்டப்பொம்மன் வடிவம் படியும் சூழல் தோன்றுகின்றது. சின்னச் சின்ன கதைப் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் ஏற்படுகின்றது.

"சின்ன வயதில் இருந்தே நானொரு புத்தகப் பிரியன். எனது இளம் பராயத்தில் அதிக பொழுதுகள் நல்ல நூல்களுடனேயே கழிந்தன. சரித்திர நாவல்களையும் வரலாற்று நூல்களையும், வீர புருசர்களினது வாழ்க்கைச் சரிதங்களையுமே நான் விரும்பிப் படித்தேன். கைச்செலவுக்காக வீட்டார் எனக்கு வழங்கிய பணத்தையெல்லாம் புத்தகங்கள் வாங்குவதிலேயே செலவிட்டேன். புதிய புதிய நூல்களை வாங்கிப் படிப்பதில் எனக்கு திருப்தியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டது. எனது ஊரில் இரு புத்தகக் கடைகள் இருந்தன. அங்கு இருக்கும் அரிய நூல்களையெல்லாம் எப்படியும் வாங்கி வாசித்துவிடுவது எனது வழக்கமாக இருந்தது. அலெக்சான்டர், நெப்போலியன் போன்றவர்களின் வீரவரலாற்றை இப்படியான நூல்களின் மூலமே நான் அறிந்துகொண்டேன். இந்திய விடுதலைப் போராட்டத்தையும், அதற்குத் தங்களையே தற்கொடையாக்கிய சுபாஸ் சந்திரபோஸ், பகவத் சிங், பாலகங்கரா திலகர் போன்றோரில் எனக்கு ஏற்பட்ட பற்றும் கரிசனையும் இந்த வாசிப்பின் விளைவுதான்.

என் போராட்ட வாழ்வில் அத்திவாரம் இப்படியான புத்தகங்களின் வாசிப்பினால்தான் கட்டி எழுப்பப்பட்டது. இந்திய விடுதலைப் போரின்பால் எனக்குள் ஏற்பட்ட ஆர்வமும் அன்னிய ஆட்சியின் ஆதிக்க அடக்குமுறைக்கெதிரான கொதிப்புணர்வும் இந்த வாசிப்புப் பழக்கத்தின்பால் ஏற்பட்டன.